2002 மே 7]
297—

நியாய விலைக் கடைகள்

***2147—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தேரி மலைப் பகுதியிலுள்ள கலசப்பாடி, நொச்சிக்குட்டை, நெல்மாங்கடை ஆகிய கிராமங்களில் புதியதாக நியாய விலைக் கடைகள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வாய்ப்பில்லை.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை சரியில்லாதபோதுகூட, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஏழைகளுக்கு வழங்கப்படுகிற அரிசியைக் குறைந்த விலையில் கிலோ ரூ. 3.50-க்கு மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை, அவருடைய பொற்பாதங்களில் சமர்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சித்தேரி என்பது மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். இந்த சித்தேரி மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியிலே கிட்டத்தட்ட 48 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, எப்படியாவது அந்த மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகிற விதத்திலே, அங்கே நியாய விலைக் கடைகள் அமைத்துக் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா, மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்தக் கடைகள் எல்லாம் சித்தேரி லேம்ப் சொசைட்டி மூலமாக சக்கம்பட்டி நியாய விலைக் கடைகள் மூலமாக நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

[2002 மே 7

உறுப்பினர் கேட்டிருக்கிற நொச்சிக்குட்டை, கலசப்பாடி ஆகிய ஊர்களிலே முறையே 92 மற்றும் 86 கார்டுகள்தான் நியாய விலைக் கடைக்கு இருக்கின்றன. 92 கார்டுகளுக்கும், 86 கார்டுகளுக்கும் ஒரு கடை திறப்பது என்பது நிர்வாக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சரியாக இருக்காது என்கிற காரணத்தினாலேயும், அதற்கு மேலாக இந்த மலைப் பகுதியிலே நாம்—நடமாடும் அங்காடிகளை—நடமாடும் ஊர்திகள் மூலமாக விநியோகம் செய்வதற்கு இந்த அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும்கூட, உறுப்பினர் கேட்டிருக்கிற அந்த நொச்சிக்குட்டை, கலசப்பாடி ஆகிய ஊர்களுக்கு ரோடு வசதிகள் சரியாக இல்லாத காரணத்தினாலே, அந்த நடமாடும் ஊர்திகூட அந்த இடத்திற்குப் போகமுடியாது இருக்கிற காரணத்தினாலே, அந்த விதியையும் இந்தக் கடைகளுக்குப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அப்படிப்பட்ட வாய்ப்பு வருகிறபோது அதைப்பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அங்கே குறைந்த ரேசன் கார்டுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மையாக இருந்தாலும்கூட, இது மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி. அங்கே 48 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய ரேசன் கடைகளிலே பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 8 கி.மீ., 15 கி.மீ., 20 கி.மீ. என்று அந்த 48 கிராம மக்கள் ஒரே இடத்திற்குச் சென்று வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேலும், இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நொச்சிக்குட்டை கிராமத்திற்கு வாகனங்கள் செல்வதற்குச் சாலை வசதிகள் இல்லையென்று குறிப்பிட்டார்கள். அங்கே தற்போது வாகனங்கள் செல்வதற்கு நல்லதோர் தார்ச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சிறப்புக் கவனம் செலுத்தி, மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டிற்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, அங்கு நடமாடும்

2002 மே 7]

அங்காடிகள் மூலம் ரேசன் பொருட்களைப்பெற நொச்சிக்குட்டை, கலசப்பாடி, நெலமாங்கடை ஆகிய மூன்று கிராமங்களையும் சேர்த்து மொத்தம் *48* கிராமங்களுக்கும் தனித்தனியாய் குறைந்தது *3* நியாயவிலைக் கடைகளாவது நம்முடைய அரசு அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மலைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுடைய குறைகளைப் போக்குவதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நடமாடும் கடைகளை நடத்துகிற அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த நொச்சிக்குட்டை போன்ற பகுதிகளுக்கு ரோடு வசதி உருவாகி இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அந்த நடமாடும் ஊர்திகளை அங்கே அனுப்பி, மக்களுக்கு அந்த நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதனையும், அப்படிப்பட்ட வாய்ப்பினை உருவாக்குகிற வகையிலே அந்த ரோடுகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுக்கின்றபோது, இந்த வண்டிகளையும் அங்கே அனுப்பி வைப்பதிலே எந்தச் சிரமமும் இருக்காது. மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு. பேரவைத் தலைவர்: வினா எண் *298*, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

298—

வெளி மாநிலங்களுக்கு அரிசி

***9758—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—